காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை 2015–2016, 2016–2017 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஆஇ) வால்பாறை தொகுதி, மரம் விழுந்து இறந்த சிறுவனின் குடும்பத்திற்கு நிவாரணம் மற்றும் காய்ந்த மரங்களை வெட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுக்கு பல வேலைகளை உள்ளாட்சித் துறையிலே முடித்துத் தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியில் கடந்த 14–6–2017 அன்று பள்ளிக்குச் சென்று திரும்பிய சிறுவன்மீது ஒரு மரம் விழுந்து, அந்தச் சிறுவன் இறந்துவிட்டான். அந்தச் சிறுவனுடன் வந்த அவனுடைய பெரியப்பா அவர்களுக்கு இரண்டு கால்களும் முறிந்துவிட்டன. வால்பாறை பகுதியில் அதிக மழை பெய்து வருவதால், அங்கு காய்ந்து, ஆபத்தான நிலையில் இருக்கும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தவும், இறந்த அந்தச் சிறுவனின் குடும்பத்திற்கு நிதியுதவியளிக்கவும் வேண்டி அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

(ஆஈ) கன்னியாகுமரி மாவட்டம், விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே வாய்மொழி குத்தகைப் பாட்டம் மூலமாக விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்கப்படுகின்ற விவசாயக் கடன்*